Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurail@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic

ஆர்.பி. பாலா இயக்கத்தில் நவீன் சந்திரா நடிக்கும் 'என் சி 51' படப்பிடிப்பு நிறைவு

சென்னை 28, அக்டோபர் 2026: இயக்குநர், தயாரிப் பாளர், டப்பிங் இயக்குநர் என திரை யுலகில் பல்வேறு பரி ம £ ண ங் க ளி ல் முத்திரை பதித்து வரும் ஆர்.பி. பாலா, முன்னணி ஒளிப்பதி வாளர் பி.ஜி. முத்தையா உடன் இணைந்து தயாரிக் கும் புதிய படத்தில் நவீன் சந்திரா முதன்மை வேடத்தில் நடிக்கிறார்.

'லெவன்' படத்தில் சிறப்பான நடிப்பிற்காக பாராட்டுகளை குவித்த நவீன் சந்திரா, தான் நடிக்கும் பாத்திரங் களை மிகவும் கவன மாகத் தேர்வு செய்து வருகிறார். அவரது 51வ து படமான இது, ஒரு புதுமையான கதைக் களத்தை மையமாகக் கொண்டுள்ளது.

ஆர்.பி. பாலா பிலிம்ஸ், பி.ஜி. முத்தையா புரொட க்ஷன்ஸ் பேனர்களில் தயாராகி வரும் இப் படத்தின் படப்பிடிப்பு திங்கட்கிழமை (அக்டோபர் 26) அன்று சென்னையில் நிறை வுற்றது. படம் சிறப்பாக உருவாகியிருப்பதை குழுவினர் அனைவரும் இணைந்து கொண் டாடினர். ஹரிபிரியா ரோஷிணி, பால சரவணன், காளி வெங்கட் முக்கிய வேடங்களில் நடிக்கும் இப்படத்திற்கு பி.ஜி. முத்தையா ஒளிப்பதிவு செய்ய, சக்தி பாலாஜி இசையமைக்க, அஜய் மனோஜ் படத்தொகுப் பை கையாளுகிறார். கலை இயக்கம்: டி. கிராபோர்டு, ஸ்டண்ட்: டேஞ்சர் மணி, பாடல் கள்: மோகன் ராஜா, ஒலிப்பதிவு: ராஜா நல்லையா, மக்கள் தொடர்பு: நிகில் முருகன். அனீஷா ரெஹானா மற்றும் ஹகினோ ஷ§ன்சுகி கெவின் இந்த திரைப் படத்தின் இணை தயாரிப்பாளர்கள் ஆவார்கள்.

ஆர்.பி. பாலா, பி.ஜி. முத்தையா தயாரிப்பில் ஆர்.பி. பாலா இயக்கத் தில் நவீன் சந்திரா நடிக்கும் 'என் சி 51' படப்பிடிப்பு நிறை வடைந்துள்ள நிலை யில், இதர பணிகளை யும் முடித்து படத்தை திரையரங்குகளில் விரை வில் வெளியிட படக் குழுவினர் திட்டமிட் டுள்ளனர்.